**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 96/2016** **Date:16.07.2025**

**(PW2)- இப்ராஹீம்**

**1,2,5** முதல் **7** பிரதிவாதி தரப்பு குறுக்கு**விசாரணை**

**1.** நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் திருவனந்தபுரத்தில் கட்டிட துறையில் மேற்பார்வையாளராக வேலை செய்கிறேன். எப்போதிருந்து மேற்படி வேலை செய்கிறேன் என்றால் 2014 முதல் திருவனந்தபுரத்தில் தங்கி வேலை செய்கிறேன், வாரம் ஒரு முறை ஞாயிற்று கிழமைகளில் ஊருக்கு வருவேன். வாதியை எப்போதிருந்து தெரியும் என்றால் வாதியின் சிறு வயதிலிருந்தே எனக்கு தெரியும். எனக்கும் வாதிக்கும் 8 வயது வித்தியாசம் என்றால் சரிதான். வாதி ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் என்றால் சரியல்ல, நடுத்தர குடும்பத்தை சார்ந்தவர் **2..** நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் பள்ளி படிப்பை முடித்த பிறகு தான் வாதி 1 ம் வகுப்பு படிக்க ஆரம்பித்திருப்பார் என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் பள்ளி படிப்பின் போது தொடர்பில்லையென்றாலும் , வாதியின் நண்பர்களுடனும் தொடர்பில்லையென்றாலும் சரியல்ல. வாதியின் பள்ளி நடவடிக்கைகள் பற்றி எனக்குநேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, ஆனால் வாதியின் பக்கத்தில் இருந்ததில்லை. வாதி பேட்மிண்டன் , கிரிக்கெட் விளையாட்டுகள் தெரியும் என்பது தொடர்பாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, அவர் சிறு குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பார்.

**3.** நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் 1976 ல் வாதி 8 ம் வகுப்பு படித்திருந்தார் என்றாலும் அப்போது நான் கூறுவது போல் அவர் குழந்தைகளுக்கு மேற்படி விளையாட்டுகளை பயிற்சி அளிக்க வாய்ப்பும் ,அதற்கு வாதிக்கு தகுதியும் திறமையும் கிடையாது என்றாலும் சரியல்ல. வாதி பேட்மிண்டன் , கிரிக்கெட் பயிற்சி கொடுத்தார் என்று நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் அவர் வேறொரு

நபரை வைத்து பயிற்சி கொடுத்தார். ESSI சங்கத்திற்கும் எனக்கும் தொடர்பு இல்லையென்றால் சரிதான்.

**4**.வாதி நூலகம் நடத்தியதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். வாதி நூலகம் நடத்தியதாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எந்த ஆண்டில் இலவச கல்விமையம் ஆரம்பித்தார் என்றால் 1986 -1987 ஆண்டு இருக்கும். மேற்படி கல்வி மையம் ஆரம்பித்ததை காட்டக்கூடிய ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, அனைத்து ஆவணங்களும் பள்ளியில் உள்ளது, மேற்படி ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய முடியாது.

**5**. வாதி எந்த இலவச கல்விமையமும் ஆரம்பிக்கவில்லையென்றாலும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ISSK 50/86 என்ற பதிவு பெற்ற சங்கத்தில் நான் உறுப்பினர் கிடையாது என்றால் சரிதான். நான் உறுப்பினராக இல்லாததால் சங்கத்தின் நடைமுறைகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி ISSK 50/86 சங்கம் நான் கூறுவது போல் மீரா பில்டிங் 160 ல் ஆரம்பிக்கவில்லையென்றாலும் மீரா பில்டிங் 16 டி என்ற எண்ணில் ஆரம்பிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

**6.** Orient English Academy எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் 1988- 1989 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி அகாடமி ISSK 50/86 சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். ISSK 50/86 சங்கம் ஆரம்பித்த போது யார் யார் எந்த பதவி வகித்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் நான்கு நபர்கள் பொறுப்பு வகித்தனர், நஜுமுதீன் தலைவராகவும் , அப்துல் ரசாக் உறுப்பினராகவும் , பாரூத் உறுப்பினராக இருந்தார்கள்.

**7.** எனவே வாதி சங்கத்தில் பொது காரியதர்சியாக நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி பொது காரியதர்சியாக இருந்ததற்கான எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. Orient English Academy க்கு எந்த ஆண்டு யாரிடமிருந்து எவ்வளவு சொத்துகள்

வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பெயரில் எந்த சொத்தும் கிடையாது என்றால் சரிதான்.

**8.** Orient Kids Play School, Orient Matriculation School, Tuckalay ஆகியவை வாதி தனது சொந்த பணத்தில் ஆரம்பித்தார் என்பதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். மேற்படி பள்ளிகள் தற்போது செயல்பாட்டிலில்லையென்றால் சரிதான். Orient English Academy வாதியின் பெயரில் கூட்டு கணக்கில் இருந்ததை காட்டக்கூடிய எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். மேற்படி பள்ளிக்கும் அகாடமிக்கும், சங்கத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லாத பட்சத்தில் அது பற்றியும் கூட்டு வங்கி கணக்கு பற்றியும் சாட்சியமளிக்க எனக்கு எந்த அருகதையுமில்லையென்றால் சரியல்ல. Orient English Academy யானது எப்போது Orient Matriculation School ஆக மாற்றம் பெற்றது என்றால் 2005 ம் ஆண்டு இருக்கும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்